# ஊனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கை

சமூகநீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்

**இந்திய அரசு**

**சாஸ்திரி பவன், புதுடெல்லி**

www.socialjustice.nic.in

மீரா குமார்
MEIRA KUMAR

சமூகநீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்

இந்திய அரசு

சாஸ்திரி பவன், புது டெல்லி- 110001

10 பிப்ரவரி. 2006

***FOREWORD***

## *முன்னுரை*

ஊனமுற்றோருக்கான தேசியக் கொள்கையை வெளியிடுவதில் நான் கௌரவமடைகிறேன். இந்திய அரசியல் சாசனம் சுதந்திரம், சமத்துவம், சமநீதி **மற்றும் சுய மரியாதையை** அனைத்து தரப்பினருக்கும் குறிப்பாக ஊனமுற்ற

நபர்களையும் உள்ளடக்கிய சமூகமாக இருக்க வலியுறுத்துகிறது. ஊனமுற்ற நபர்கள் தொடர்பான சமூகப்பார்வையில் நிறைய நேர்மறையான மாற்றங்கள் சமீப ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளன. சமமான வாய்ப்புகளும், மறுவாழ்வு திட்டங்களும் அவர்களுக்குக் கிடைத்தால் பெரும்பாலான பேரால் தரமான வாழ்க்கையை வாழமுடியும்.

2. **ஊனமுற்ற நபர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்திய அரசு உருவாக்கும் கொள்கைகளின் பிரதிபலிப்பை அரசன் சட்டங்கள், திட்டங்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களை நல்ல ஆற்றல் மிகு மனிதவளங்களாக மாற்ற உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் காண முடிகிறது.** எப்படியிருப்பினும் ஊனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கைகள் குறித்த விரிவான ஆவணம் ஒன்றின் தேவையை இது பூர்த்திசெய்கிறது

3. **இந்தத் தேசியக் கொள்கை ஆவணத்தினைக் கொண்டு வருவதற்கான** மதிப்புமிக்க ஆலோசனைகளைப் பங்களித்ததற்காக அமைச்சரவை சகாக்களுக்கும்/ இந்திய அரசு அமைச்சக அதிகாரிகளுக்கும், ஊனமுற்றோர் நலன் சார்ந்த நிபுணர்களுக்கும், ஊனமுற்றோர் நலத்திற்காக பணியாற்றும் அரசுசாராத நிறுவனங்களுக்கும் எனது உண்மையான நன்றியைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

4. ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்கு இந்த கொள்கை ஆவணத்தைச் **செம்மையாக** அமல்படுத்த அரசு, அரசு சாராத அமைப்புகளும் நிபுணர்களும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மீரா குமார்(ஸ்ரீமதி)




**எண்..3-1/1993-DD.III**

**சமூகநீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு**

**<u>National Policy for Persons with Disabilities</u>**

## <u>ஊனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கை</u>

***Introduction***

### *அறிமுகம்*

இந்திய அரசியல் சாசனம், அனைத்து குடிமக்களுக்கும், ஊனமுற்றோரையும் உள்ளடக்கிய சமூகத்திற்கும் சுதந்திரம், சமநீதி, சமத்துவம் **மற்றும் சுய மரியாதையை** உறுதிப்படுத்துகிறது. சமீப ஆண்டுகளில் ஊனமுற்ற நபர்கள் தொடர்பான சமூகப்பார்வையில், பரவலான, நேர்மறையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமமான வாய்ப்புகளும், மறுவாழ்வு திட்டங்களும் அவர்களுக்குக் கிடைத்தால் பெரும்பாலான பேரால் தரமான வாழ்க்கையை வாழமுடியும்.

2. 2001 இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்தியாவில் 2.19 கோடி பேர் ஊனமுற்றவர்கள். இவர்கள் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 2.13 சதவிகிதமாக உள்ளனர். **ஊனமுற்றவர்களில்** பார்வை, செவித்திறன், உடல்செயல் இயக்க குறைபாடு மற்றும் மூளைக்குறைபாடுகளுடன் **இருப்பவர்கள் அடங்கியுள்ளனர்**. இவர்களில் 75 சதவிகிதம் பேர் கிராமப்பகுதிகளில் வசிக்கின்றனர். 45 சதவிகிதம் பேர் கல்வியறிவு பெற்றவர்கள். 34 சதவிகிதம் பேர்தான் வேலைவாய்ப்பைப் பெற்றவர்களாக உள்ளனர். மருத்துவரீதியான மறுவாழ்வுக்குத்தான் முன்பு அதிக முன்னுரிமை தரப்பட்டது. தற்போது சமூக மறுவாழ்வுக்கு அதிகம் கவனம் தரப்படுகிறது. உடல் ஊனமுற்றவர்களின் **திறமைகளை அறிந்து அவற்றை** ஊக்குவித்து அவர்களை சமூகத்தின் மையநீரோட்டத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் அனைவரிடத்திலும் உருவாகியுள்ளது. ஊனமுற்ற நபர்கள் நலனுக்காக இந்திய அரசு மூன்று சட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

i. ஊனமுற்ற நபர்கள்(சமவாய்ப்பு, உரிமைப்பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு) சட்டம்(1995), கல்வி, வேலை, **தடை இல்லாத** நல்ல சூழல் மற்றும் சமூகப்பாதுகாப்பை வழங்குகிறது.

ii. ஆட்டிசம் (**மதி இறுக்கம்**) , மூளை இசிவு, மூளைக்குறைபாடு மற்றும் பலகுறைபாடுகள் சட்டத்தின்படி(1999), நான்கு வகை குறைபாடுகளுக்கு

சட்டரீதியாக பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. முடிந்தவரைக்கும் சுதந்திரமான வாழ்வுச்சூழலை ஏற்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது.

iii. இந்திய மறுவாழ்வு **மன்றச்** (கவுன்சில்) சட்டம்(1992), ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான மனிதவள ஆற்றலை மேம்படுத்த வலியுறுத்துகிறது

3. சட்டப்பாதுகாப்பைத் தாண்டி உள்கட்டுமான அளவில் விரிவான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மனிதவள ஆற்றலை மேம்படுத்தும் பணியில் 7 தேசியப் பயிலகங்கள் செயல்படுகின்றன.

- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் பிசிக்கலி ஹேண்டிகேப்ட், புதுடெல்லி
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் விசுவல்லி ஹேண்டிகேப்ட், டெஹ்ராடூன்
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் ஆர்த்தோபேடிக்கலி ஹேண்டிகேப்ட், கொல்கத்தா
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் மென்ட்டலி ஹேண்டிகேப்ட், செகந்திராபாத்.
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் ஹியரிங் ஹேண்டிகேப்ட், மும்பை
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் ரீஹாபிலியேசன் ட்ரெய்னிங் & ரிசர்ச், கட்டாக்.
- நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் எம்பவர்மெண்ட் ஆப் பெர்சன்ஸ் வித் மல்டிப்பிள் டிசெப்ளிட்டீஸ், சென்னை.

4. ஐந்து கூட்டு மறுவாழ்வு மையங்களும், நான்கு பிராந்திய மறுவாழ்வு மையங்களும் 120 மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்களும் **(DDRCs)** சேர்ந்து ஊனமுற்ற நபர்களுக்கு பல்வேறு மறுவாழ்வு சேவைகளைச் செய்துவருகிறது. சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழும் நிறை தேசிய நிலையங்கள் மறுவாழ்வுப் பிரிவில் ஈடுபட்டு வருகின்றன. பெங்களூரில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் மென்டல் ஹெல்த் அண்ட் நியூரோ சயின்சஸ், மும்பையில் உள்ள ஆல் இந்தியா இன்ஸ்டிட்யூட் ஆப் பிசிக்கல் மெடிசின் அண்ட் ரீஹாபிலிடேசன், மைசூரில் உள்ள ஆல் இந்தியா இன்ஸ்டிட்யூட் ஆப் ஸ்பீச் அண்ட் ஹியரிங், ராஞ்சியில் உள்ள சென்ட்ரல் இன்ஸ்டிட்யூட் ஆப் சைக்கியாட்ரி ஆகிய அமைப்புகளும் ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இத்துடன் மாநில அரசு

நிறுவனங்களும் மறுவாழ்வு சேவைகளை வழங்குகின்றன. **மேலும்** மறுவாழ்வுப் பணியாளர்களுக்கான பயிற்சிகளை 250 தனியார் பயிலகங்கள் கொடுக்கின்றன.

5. **(NHFDC)** தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகம், ஊனமுற்ற நபர்களின் சுயவேலைவாய்ப்பு முயற்சிகளுக்கு சலுகைரீதியாக கடன்களை மாநில அமைப்புகள் வாயிலாக வழங்குகிறது

6. கிராம, நடுத்தர, மாவட்ட அளவில் ஊனமுற்றோர் **நலன் காக்க** பஞ்சாயத் ராஜ் அமைப்புகளுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

7. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் ஊனமுற்ற நபர்களுக்கான முழுப்பங்கேற்பு மற்றும் சமத்துவத்தை வழங்கும் உடன்படிக்கையில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. பிவாகோ மில்லெனிய நடவடிக்கைத் திட்டத்திலும் அனைவரையும் உள்ளடக்கிய, தடைகள் அற்ற உரிமை அடிப்படையிலான சமூகத்தை உருவாக்குவோம் என்றும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. ஊனமுற்ற நபர்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான ஐநாவின் ஒப்பந்தத்திலும் கையெழுத்திடும் பேச்சுவார்த்தையில் ஐநாவுடன் இந்தியா ஈடுபட்டுள்ளது.

### ***தேசிய கொள்கை அறிக்கை(national policy statement)***

8. ஊனமுற்ற நபர்கள், நாட்டின் மதிப்புமிக்க மனிதவளம் தான் என்பதை தேசியக் கொள்கை அங்கீகரிக்கிறது. அவர்களுக்கு சமவாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சமூகத்தில் முழுப்பங்கேற்பு **போன்ற** உரிமைகளுக்கான சூழலை உருவாக்கவும் நாடு உறுதிபூண்டுள்ளது. அந்தக் கொள்கைத்திட்டத்தின் குவியம் **பின்வருமாறு**:

### I.ஊனத்தைத் தடுப்பது (prevention of Disabilities)

9. பல சமயங்களில் பெரும்பாலான ஊனங்களை முன்பே தடுக்க முடியும். அதனால் ஊனத்தைத் தடுப்ப**தற்கு முக்கியத்துவம் அளிக்க** வேண்டும். ஊனத்துக்குக் காரணமான வியாதி தொடர்பான விழிப்புணர்வும், தடுப்பு நடவடிக்கைகளும் அவசியம். கர்ப்பகாலத்திலோ பிரசவத்துக்குப் பிறகோ குழந்தைகளுக்கு ஊனம் ஏற்படாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளில் கவனமும் தீவிரமும் செலுத்த வேண்டும்.

## II. மறுவாழ்வு நடவடிக்கைகள்(rehabilitation measures)

10.மறுவாழ்வு நடவடிக்கைகளை மூன்று தனித்துவப் பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்:

i. உடல்ரீதியான மறுவாழ்வு, தொடக்கத்திலேயே ஊனத்தை அறிதல், தலையீடு, ஆலோசனை,தேவையான மருத்துவ உதவி மற்றும் துணைக்கருவிகள் தருதல். மறுவாழ்வுப் பணியாளர்களை மேம்படுத்தும் நடவடிக்கையும் இதில் சேரும்

ii. ஊனமுற்றவர்களுக்கு கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிப்பதன் மூலம் அவர்களை மறுவாழ்வுக்குத் தயாராக்குதல்

iii. சமூகத்தில் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு பொருளாதார மறுவாழ்வு

### II A. Physical Rehabilitation Strategies

II . அ. உடல்ரீதியான மறுவாழ்வுக்கான வழிமுறைகளை வகுப்பது

**(அ) தொடக்கத்திலேயே ஊனத்தை அறிதல் மற்றும் மருத்துவத் தலையீடு (early detection and intervention)**

11. ஊனத்தை ஆரம்பத்திலேயே கண்டறிவதும், மருந்து மற்றும் பிற சிகிச்சைகளைச் செய்வ**தன் மூலம்** ஊனம் தீவிரமாவதை**யும் அதிகமாவதையும் தடுக்கலாம்**. அதனால்தான் ஊனத்தை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிக்க வலியுறுத்தப்படுகிறது. அதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டியது அவசியம். கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு இதுபோன்ற வசதிகள் **இருப்பதைத்** தெரியப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்

**(ஆ) ஆலோசனை & மருத்துவரீதியான மறுவாழ்வு**

12. உடல்ரீதியான மறுவாழ்வு நடவடிக்கைகளில் ஆலோசனை **அளிப்பதும்**, ஊனமுற்றை நபர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்க**ளது** குடும்பத்தினருக்கு நம்பிக்கை ஊட்டுவதும் அடங்கும். அத்துடன் பிசியோதெரபி, தொழில்ரீதியான சிகிச்சை, உளவியல் சிகிச்சை, அறுவைசிகிச்சை மூலம்

சரிசெய்ய முயலுதல், பார்வைத்திறன் மதிப்பீடு, பார்வைத்திறன் ஊக்குவிப்பு, பேச்சுத்திறன் பயிற்சி, செவித்திறன் மறுவாழ்வு மற்றும் சிறப்புக்கல்வி ஆகியவை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புக்கல்வியாக மாநில அரசாங்கங்களாலும், உள்ளூர் அமைப்புகள், அரசுசாராத அமைப்புகள், ஊனமுற்ற நபர்களின் பெற்றோர் **மற்றும் ஊனமுற்றோர் சங்க** அமைப்புகள் போன்றவற்றால் சிறப்பான முறையில் தரப்படுகிறது.

13. தற்சமயம், மறுவாழ்வு சேவை **மையங்கள்** நகர்புறப்பகுதிகளைச் சுற்றியே **அமைந்துள்ளன**. ஆனால் 75 சதவிகிதம் ஊனமுற்ற நபர்கள் கிராமப்புறங்களிலேயே வாழ்கிறார்கள். தொழில்முறையாக மறுவாழ்வுப் பணியைச் செய்பவர்கள் தங்கள் சேவைகளை கிராமப்புறங்களுக்கும் நீட்டிக்க வேண்டும். தனியார் மறுவாழ்வு சேவை மையங்கள் குறைந்தபட்ச தர மதிப்பீடுடன் தங்களை ஒழுங்குசெய்வது அவசியம்.

14. கிராமப்புறங்கள் மற்றும் மறுவாழ்வு சேவை கிடைக்காத பகுதிகளுக்கு மறுவாழ்வு சேவையை விரிவுபடுத்த புதிய மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் (DDRCs) மாநில அரசின் உதவியுடன் கட்டப்படும்.

15. தேசிய கிராமப்புற நலத்திட்டத்தில் வரும் ஆஷா கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் ஆரோக்கியத் தேவைகளைக் கவனிக்கிறது. குறிப்பாக சமூகத்தின் விளிம்புநிலையில் நோய்கள் அதிகம் பாதிக்கும் வாய்ப்புள்ள மக்களின் நலனில் ஆஷா திட்டம் அக்கறை செலுத்துகிறது. அடித்தட்டு நிலையில் இருக்கும் ஊனமுற்ற நபர்களுக்கான அனைத்து மறுவாழ்வு சேவைகளையும் கவனிப்பதற்காக ஆஷா வடிவமைக்கப்பட்டுள்ளது.

**(இ) உதவிக் கருவிகள் (assistive devices)**

16. ஊனமுற்ற நபர்களுக்கு நீடித்த உழைப்பைத் தரக்கூடிய, விஞ்ஞானமுறையில் தயாரிக்கப்பட்ட, ஐஎஸ்ஐ தரச்சான்று பெற்ற நவீன உதவிக்கருவிகள் கிடைப்பதற்கு இந்திய அரசு உதவுகிறது. இதன்மூலம் அவர்கள் உடல், சமூக மற்றும் உளவியல் **ரீதியாக முன்னேற்றம் அடைவதால்** ஊனத்தின் தாக்கம் குறையும்

17. தேசிய நிலையங்கள், மாநில அரசுகள், மாவட்ட ஊனமுறோர் மறுவாழ்வு மையங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் வாயிலாக ஊனமுற்ற

நபர்களுக்கு செயற்கைக் கால்கள் மற்றும் செயற்கை மூட்டிணைப்புகள், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, சிறப்புக் காலணிகள் போன்ற அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகளுக்கான கருவிகள், கல்விக் கருவிகள்(பிரெய்ல் எழுத்துக்கருவி, டிக்டபோன், சிடி ப்ளேயர்/டேப்ரிக்கார்டர்), பார்வைக்குறைபாட்டு உதவிக்கருவிகள், பார்வையற்றவர்களுக்கான வழிக்காட்டு கழிகள், செவிட்டுக்கருவிகள், கல்விக்கான கருவிகள், தகவல் தொடர்புக் கருவிகள், மூளைக்குறைபாடு உள்ளவர்களுக்கு உதவி மற்றும் எச்சரிக்கை செய்யும் கருவிகளும் வழங்கப்படும். சேவை அதிகம் கிடைக்காத, இல்லாத இடங்களுக்கும் இந்த கருவிகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

18. ஊனமுற்ற நபர்களுக்கு உதவக்கூடிய உயர்தொழில்நுட்ப கருவிகளை உற்பத்தி செய்ய தனியார், அரசு மற்றும் இரண்டும் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் முன்வந்தால் பொதுத்துறை வங்கிகள் நிதி உதவி வழங்கும்

### (ஈ) மறுவாழ்வு தொழில்நுட்பவியலாளர்களின் மேம்பாடு(Development of Rehabilitation Professionals)

19. ஊனமுற்ற நபர்களின் மறுவாழ்வுக்கு **தொழில்நுட்பவியலாளர்கள் நிறைந்த** மனிதவளம் தேவை. மனிதவளம் எவ்வளவு தேவை என்று ஆய்வுசெய்யப்படவும் அதை எப்படி மேம்படுத்துவது என்று திட்டமிடவும் வேண்டும். ஏனெனில் மறுவாழ்வு என்பது மனிதவளப் பற்றாக்குறையால் பாதிக்கப்படக் கூடாது.

### II பி. ஊனமுற்றோருக்கான கல்வி(Education for Persons with Disabilities)

20. சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு கல்விதான் பலனுள்ள வாகனமாகும். 1995 இல் உருவான ஊனமுற்ற நபர்கள் நலச்ச**ட்டத்தின் கீழ்** பிரிவு 26 மற்றும் 21 ஏ பிரிவு மூலம் அரசியல் சாசனம் உறுதி செய்த கல்விக்கான அடிப்படை உரிமையையும் துணையாகக் கொண்டு 18 வயது வரையிலான ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வி தருவதை உறுதிசெய்யவேண்டும். 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் வாழும் ஊனமுற்றோரில் 51 சதவிகிதம் பேர் கல்வியறிவற்றவர்கள். இது மிகப்பெரிய சதவிகிதமாகும். அனைவரையும் உள்ளடக்கிய பொதுக்கல்வி அமைப்புக்குள் ஊனமுற்ற குழந்தைகளையும் உள்ளடக்கி மையநீரோட்டத்தில் இணைப்பது முக்கியமான தேவையாக

உள்ளது.

21. அரசு கொண்டுவந்த சர்வ சிக்சா அபியான் (அனைவருக்கும் கல்வி) திட்டப்படி 2010 **ஆம் ஆண்டிற்குள்** அனைத்து இந்தியக் குழந்தைகளும் எட்டாம் வகுப்புவரை கட்டாயக் கல்வி பெறும் திட்டத்தில் 6 முதல் 14 வயது வரையுள்ள ஊனமுற்ற குழந்தைகளும் இணைக்கப்பட்டனர். 15-18 வயதில் இருக்கும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் **(IEDC)** மூலம் இலவசக் கல்வி கொடுக்கப்படுகிறது

22. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் **(SSA)** கீழ், **தடையின்றி தொடர்ச்சியான கல்வி பெறுவதற்கான வழிகள்**, **கல்வி கற்க உதவும்** கருவிகள், போக்குவரத்து உதவிக்கருவிகள், **தேவைப்படும் இதர சேவைகள்** அனைத்தும் வழங்கப்படும். மாற்றுப்பள்ளிகள், திறந்தவெளி பள்ளிகள், தொலைதூரக்கல்வி, சிறப்புப்பள்ளிகள், வீட்டிலேயே கல்வி, வந்து செல்லும் ஆசிரியர் மாதிரி, நிவாரணக் கல்வி, பகுதிநேர வகுப்புகள், சமூக அடிப்படையிலான மாறுவாழ்வு மற்றும் தொழிற்கல்வி ஆகிய வாய்ப்புகளும் உள்ளன.

23. ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைப்புத் திட்டம் மாநில அரசுகள், சுயாட்சி அமைப்புகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. இவற்றின் வாயிலாக சிறப்பு ஆசிரியர்கள், புத்தகங்கள் மற்றும் பாடக்குறிப்பேடுகள், சீருடை, வாகனம், பார்வையற்றவர்களுக்கு வாசிப்பவர்களுக்கான படிகள், விடுதிப் படி, கருவிகளுக்காகும் செலவு, கட்டடரீதியான தடைகளை களைந்து சீர்செய்வது, பயிற்றுவிக்கும் பொருட்களை வாங்குவதற்கும், தயாரிப்பதற்கும் நிதி உதவி, பொது ஆசிரியர்களுக்கு பயிற்சியும், பயிற்சி அறைகளுக்கு கருவியும் வழங்கப்படும்.

24. தொடர்ந்த கருத்தாய்வுகள் மூலம் ஊனமுற்ற குழந்தைகளை அடையாளம் **காணும்** முறைகளை மேம்படுத்துவது, அவர்களுக்கான சிறப்புப் பள்ளிகளில் போதிய அளவு ஊனமுற்ற மாணவர்க**ளைச் சேர்த்தல்**,கல்வியைத் தொடர்தல், பள்ளிப்படிப்பை பூர்த்தி செய்தல் ஆகியவற்றையும் தொடர்ந்து மேம்படுத்த அரசு இணைந்த முயற்சியை எடுத்தல் வேண்டும். ஊனமுற்ற குழந்தைகளுக்கு பொருத்தமான பாடநூல்கள் மற்றும் பாடக்கருவிகளை வழங்குவதில் அரசு உறுதியாக இருத்தல் வேண்டும். அத்துடன் பொருத்தமான பயிற்சிபெற்ற, ஊனமுற்றவர் நலன் குறித்து பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பள்ளிகளில்

நியமிக்கப்படுகிறார்களா என்று **கவனிப்பதும்** அவசியம்.

25. பள்ளிக்குப் பிறகான படிப்பைத் தொடர இந்திய அரசு ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குகிறது. அரசு இந்தக் கல்வி உதவித்தொகையை தொடர்ந்து தருவதோடு இதன் பயனாளிகளையும் அதிகரிக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறது

26. ஏற்கனவே இருக்கும் பயிற்சி நிலையங்களை, ஊனமுற்ற மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி கொடுப்பதற்கான நிலையங்களாகவும் நவீன திறன்மேம்பாட்டுப் பயிற்சிகளைச் சொல்லிக்கொடுப்பதற்கான வசதியுள்ளதாகவும் மாற்றவேண்டும். பயிற்சி நிலையங்கள் இல்லாத கிராமப்புறப் பகுதிகளில் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும். ஊனமுற்ற நபர்களுக்கு தொழில்பயிற்சி தர அரசுசார நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படும்.

27. பல்கலைக்கழகங்கள், உயர்தொழில்நுட்ப பயிலகங்கள் மற்றும் பிற கல்வி நிலையங்களில் உயர்கல்வியும் தொழிற்கல்வியும் பெறுவதற்கு ஊனமுற்ற மாணவர்களுக்கு **வசதிகளும் சலுகைகளும்** செய்து தரப்படும்.

**II சி. ஊனமுற்றோருக்கு பொருளாதார மறுவாழ்வு (Economic Rehabilitation of Persons with Disabilities)**

28. ஊனமுற்ற நபர்க**ளுக்கான** பொருளாதார மறுவாழ்வு என்பது ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சூழலில் சம்பளம் பெறும் வேலைக்கோ, சுயவேலைவாய்ப்புக்கோ தகுதி **பெறச்**செய்வது ஆகும். தொழில் மறுவாழ்வு மையங்கள் மற்றும் தொழிற்பயிற்சி மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்த**ச்** சேவைகளை ஊனமுற்ற நபர்களுக்குச் செய்ய முடியும். நகர்புறத்திலும், கிராமப்புறங்களிலும் உள்ளவர்கள் இந்தப் பயிற்சியின் மூலம் பலன்பெறுவது அவசியம். இந்தப் பயிற்சிகளின் மூலம் வாய்ப்புகள் அதிகரித்து நல்ல வேலைவாய்ப்புக்கான சூழலை அவர்களுக்கு உருவாக்க வேண்டும். அடுத்து ஊனமுற்ற நபர்களின் பொருளாதார சுயமேம்பாட்டுக்கான வழிமுறைகள் **பின்வருமாறு.**

**(i) அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு(Employment in Government Establishments)**

**ஊனமுற்றோர் நலச் சட்டத்தின்படி(1995), எல்லா அரசு நிறுனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஊனமுற்றோர்கள் பணியாற்ற ஏதுவாக இருக்கக் கூடிய பணிகளில் 3 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசுத்துறைகளில் க்ரூப் ஏ,பி,சி,டி இல் முறையே 3.07,4.41,3.76 மற்றும் 3.18 சதவிகிதம் ஊனமுற்றவர்கள் பணியாற்றுகின்றனர். அரசின் பொதுத்துறை நிறுவனங்களில், ஊனமுற்றோர்க்கான பணிநிலை க்ரூப் ஏ,பி,சி மற்றும் டி இல் முறையே 2.78% , 8.54%,5.0% மற்றும் 6.75% ஆக உள்ளது. ஊனமுற்றோர் நலச்சட்டம் (1995)ன் கீழ் அரசிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஊனமுற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்களா என்பதையும் அரசு உறுதிப்படுத்தும். 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஊனமுற்றோர்கள் பணியாற்ற ஏதுவாக இருக்கக் கூடிய பணிகளின் பட்டியல் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும்.**

**(ii) தனியார் துறையில் வேலைவாய்ப்பு(Wage employment in Private sector)**

தனியார் துறையில் ஊனமுற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க பிரத்யே பயிற்சித்திறன்களை அவர்களுக்கு மேம்படுத்த வேண்டும். தொழில் மறுவாழ்வு மற்றும் பயிற்சி மையங்கள் போதிய பயிற்சிகளை ஊனமுற்ற நபர்களுக்கு வழங்கி தனியார் துறையில் ஊனமுற்ற நபர்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. அவர்களது சேவைகளை விரிவாக்கி தங்கள் சக்தி மற்றும் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தொழில் மறுவாழ்வு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் தங்கள் பயிற்சிகளைக் கொடுக்கின்றன. சேவைத் துறையில் அதிக வளர்ச்சி காணப்படுவதால், சந்தையின் தேவைக்கு ஏற்ப சேவைத்துறையில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஊனமுற்ற நபர்களுக்குப் பயிற்சிகள் தந்து ஊக்குவிக்கப்படுகிறது. தனியார் துறையில் ஊனமுற்ற நபர்களை வேலைக்கு சேர்த்துக்கொள்ளும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் அந்நிறுவனங்களுக்கு உதவித்தொகை, பரிசுகள், வரிவிலக்குகள் போன்றவை தரப்படுகின்றன.

**(iii) சுய வேலைவாய்ப்பு(self employment)**

**ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் சூழலில் ஊனமுற்ற நபர்களுக்கு சுயவேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். தொழிற்கல்வி மற்றும் மேலாண்மைப் பயிற்சி**

**மூலம் இதை வழங்கலாம். தற்போது என்எச்எப்டிசி(தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்) மூலம் குறைந்த வட்டியில் வழங்கப்படும் கடன்திட்டங்களை மேம்படுத்தி வெளிப்படையான, எளிமையான, செயல்திறனுள்ள கடன்திட்டமாக மாற்றவேண்டியது அவசியம் ஊக்கத்தொகைகள், வரிவிலக்குகள், வரிச்சலுகைகள், சரக்குகள் கொள்முதலில் முன்னுரிமை, மற்றும் சேவை முன்னுரிமைகளை அரசு ஊனமுற்ற நபர்களுக்குத் தந்து அவர்களை சுய தொழில் செய்ய ஊக்கப்படுத்த வேண்டும். ஊனமுற்ற நபர்களால் உருவாக்கப்படும் சுய உதவிக்குழுக்களுக்கு நிதி உதவி தருவதில் முன்னுரிமை தரவேண்டியது அவசியம்.**

**III. ஊனமுற்ற பெண்கள்(Women with disabilities)**

29. 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 93.01 லட்சம் ஊனமுற்ற பெண்கள் இருக்கின்றனர். ஊனமுற்றோர் தொகையில் பெண்கள் 42.46 சதவிகிதம் பங்குவகிக்கின்றனர். ஊனமுற்ற பெண்கள் சுரண்டலுக்கும், துன்புறுத்தப்படுதலுக்கும் உள்ளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் மறுவாழ்வு சேவைகளுக்கான பிரத்யேகத் திட்டங்கள் ஊனமுற்ற பெண்களுக்காக அவர்களது பிரத்யேகத் தேவைகளை கருத்தில் கொண்டு உருவாக்கப்படும். சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வசதிகள் உருவாக்கப்படும். சமூகத்தாலும், குடும்பத்தினராலும் புறக்கணிக்கப்பட்ட ஊனமுற்ற பெண்கள்/குழந்தைகளுக்கு மறுவாழ்வு தர சிறப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். குடும்பங்களில் அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு தங்களைத் தகவமைத்துக் கொள்ளவும், அவர்கள் வசிப்பதற்கு உதவிசெய்வதன் மூலமும், பயிற்சிகள் மூலம் பலன்தரும் வேலைவாய்ப்புத் திறன்களைப் பெறவும் ஊக்குவிக்கப்படும். ஊனமுற்றோர் நலத்திட்டங்களில் பலன் பெறுபவர்களில் குறைந்தபட்சம் 25 சதவிகிதப் பெண்களாவது பலன்பெற வேண்டும் என்று அரசு கருதுகிறது. இதனால் ஊனமுற்ற பெண்கள் அங்கம் வகிக்கும் திட்டங்களை அரசு ஊக்குவிக்கும்.

30. ஊனமுற்ற பெண்களுக்கான தற்காலிக தங்கும் இல்லங்கள், வேலைபார்க்கும் ஊனமுற்ற பெண்களுக்கான விடுதிகள், ஊனமுற்ற பெண்களுக்கான முதியோர் இல்லங்கள் ஆகியவை அமைக்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

31. குழந்தைகளைப் பராமரிப்பதில் ஊனமுற்ற பெண்களுக்கு நிறைய சிரமங்கள் இருப்பது கண்டுணரப்பட்டுள்ளது. இதற்காக ஊனமுற்ற தாய்மார்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு முன்னெடுக்க உள்ளது. இந்த நிதியைக் கொண்டு இன்னொருவரின் உதவியுடன் குழந்தையைப் பராமரிக்கலாம். இந்தத் திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும்.

**IV. ஊனமுற்ற குழந்தைகள் (Children with Disabilities)**

32. ஊனமுற்றவர்களில் அதிகம் பாதிக்கபடுபவர்கள் ஊனமுற்ற குழந்தைகள் ஆவர். அதனால் அக்குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் தேவை. இதற்காக அரசு: -

ஏ அ. ஊனமுற்ற குழந்தைகளின் நலம், பாதுகாப்பு உரிமைகளை உறுதிப்படுத்துதல்;

ஆ கௌரவம், சுயமரியாதை மற்றும் சமத்துவத்துடன் கூடிய வளர்ச்சியை ஊனமுற்ற குழந்தைகளுக்கு உறுதிசெய்வதோடு, உரிமைகள், சமவாய்ப்புகள் மற்றும் முழுபங்கேற்பையும் பெறும் சூழலை அக்குழந்தைகள் பெறுவதையும் உறுதிசெய்தல் வேண்டும்.

இ சிறப்பு மறுவாழ்வு சேவைகளை வழங்குவதுடன் கல்வி, ஆரோக்கிய சேவை, தொழிற்பயிற்சியையும் பெறுவதற்கு ஊனமுற்ற குழந்தைகளுக்கு உறுதிசெய்தல் வேண்டும்.

ஈ. ஊனமுற்ற குழந்தைகளின் பிரத்யேகத் தேவைகளை அங்கீகரிப்பதோடு, அவர்களது நலம் மற்றும் பாதுகாப்புக்கான உரிமையையும் உறுதிசெய்தல் அவசியம்.

**V. தடையற்ற சூழல்(Barrier-free environment)**

33. கட்டடங்களுக்குள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் உலவ தடையற்ற சூழலை ஊனமுற்ற நபர்களுக்கு உருவாக்குதல் வேண்டும். தடையற்ற கட்டட வடிவமைப்பு என்பதின் நோக்கம், தனிப்பட்ட நபர்கள் சுதந்திரமாக இயங்கினால்தான், அவர்கள் யாருடைய உதவியுமின்றி அன்றாடப் பணிகளில் ஈடுபட முடியும். அதனால் கூடுமானவரை கட்டடங்கள்/இடங்கள்/ பொது வாகனப் போக்குவரத்து போன்றவற்றில் தடையற்ற வடிவமைப்பும் சூழலும்

இருத்தல் அவசியம்.

**VI. ஊனமுற்றவர் சான்றிதழ் (Issue of Disability Certificates)**

34. ஊனத்தை மதிப்பிடுவதற்கும், சான்றிதழ் அளிப்பதற்குமான வழிமுறைகளை இந்திய அரசு வகுத்துத் தந்துள்ளது. எளிமையான, வெளிப்படையான, நட்பார்ந்த முறையில் ஊனமுற்ற நபர்கள் தங்களுக்குத் தேவையான ஊனமுற்றோர் சான்றிதழைப் பெறுதவதற்கு அரசு ஆவன செய்துள்ளது.

**VII. சமூகப் பாதுகாப்பு (Social Security)**

35. ஊனமுற்ற நபர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பராமரிப்பவர்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கும், மருத்துவ சேவைக்கும், போக்குவரத்துக்கும், உதவிக்கருவிகளுக்கும் கூடுதலாக செலவாகும். அதனால் அவர்களுக்கு பலவிதங்களில் சமூகப்பாதுகாப்பு அவசியம். மத்திய அரசு ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களது பாதுகாவலர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கிறது. மாநில அரசுகள்/ யூனியன் நிர்வாகங்கள் ஆகியவை ஊனமுற்றோர் பென்சன் மற்றும் வேலைவாய்ப்பற்ற ஊனமுற்றோர் உதவித்தொகையையும் வழங்குகின்றன. ஊனமுற்ற நபர்களுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புக் கொள்கையை உருவாக்க மாநில அரசுகள் ஊக்குவிக்கப்படும்.

36.ஆட்டிசம், மூளை இசிவு, மூளைக்குறைபாடு மற்றும் பல குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள், தங்கள் மரணத்துக்குப் பிறகு தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று துயரத்திலும் பாதுகாப்பின்மையிலும் இருப்பார்கள். ஆட்டிசம், மூளை இசிவு, மூளைக் குறைபாடு மற்றும் பலகுறைபாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான தேசிய அறக்கட்டளை, உள்ளூர் கமிட்டியின் மூலம் சட்டப் பாதுகாவலர்களை நியமிக்கும். அத்துடன் இந்த அறக்கட்டளை பாதுகாவலர் உதவித்தொகைத் திட்டத்தையும் மேலே சொல்லப்பட்டுள்ள தீவிர பாதிப்புகள் கொண்ட, கைவிடப்பட்ட நிலையில் ஊனமுற்றோருக்கு வழங்குகிறது. இத்தொகையைக் கொண்டு அவர் தனக்குப் பாதுகாவலரை வைத்துக்கொள்ளலாம். இத்திட்டம் தற்போது சில மாவட்டங்களில் அமல்செய்யப்பட்டுள்ளது. அது படிப்படியாக மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

## VIII. அரசு சாரா நிறுவனங்களுக்கு ஊக்கம் தருதல்(Promotion of Non-Governmental Organizations) (NGOs)

37. அரசின் செயல்பாடுகளுக்கு உறுதுணையான முக்கியமான அமைப்பாக அரசு சாரா துறையினரை தேசியக் கொள்கை அங்கீகரித்துள்ளது. அரசு சாரா நிறுவனங்கள் தற்போது அதிகம் வளர்ந்து வருகின்றன. ஊனமுற்ற நபர்களுக்கான சேவை அம்சங்களில் அரசு சாரா நிறுவனங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. அரசு சாரா நிறுவனங்களில் சில மனிதவள மேம்பாடு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. அரசு, ஊனமுற்ற நபர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அர கொள்கை உருவாக்கம், திட்டமிடுதல், அமலாக்கம், கண்காணிப்பு மற்றும் அறிவுரைக்கு அரசுசாரா நிறுவனங்களை சேர்த்து ஈடுபடுத்துகின்றன. ஊனமுற்றோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பான மேம்பட்ட திட்டமிடல், கொள்கை உருவாக்கம் மற்றும் அமலாக்கத்திற்கு அரசு சாரா நிறுவனங்களை கலந்தாலோசிக்கின்றன. தொடர்பு வலை உருவாக்கம், தகவல் பரிமாற்றம், அரசு சாரா நிறுவனங்களிடம் இருக்கும் நல்ல நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது ஆகியவற்றை ஊக்குவித்து அதற்கு தேவையான வசதிகளையும் அரசு செய்து தருகிறது. பின்வரும் செயல்பாடுகளை அரசு செய்கின்றது.

i. ஊனமுற்றோர் நலம் தொடர்பாக பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பெயர்விவரக் கையேடு ஒன்று தயாரிக்கப்படும். அதில் அவர்கள் செய்யும் பிரதானப் பணிகள் பற்றிய விவரங்களோடு, புவியியல் பிராந்திய விவரங்களும் கொடுக்கப்படும். மத்திய அரசு மற்றும் மாநில அரசின் உதவி பெறும் நிறுவனங்களின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் மனிதவளமும் அதில் தெரியப்படுத்தப்பட்டிருக்கும். ஊனமுற்ற நபர்களின் அமைப்புகள், குடும்ப அமைப்புகள் மற்றும் ஊனமுற்றோரின் பெற்றோர்களுக்கு உதவி வழங்கும் அமைப்புகள் ஆகியவையும் அடையாளம் காணப்பட்டு அவற்றின் விவரங்கள் தரப்படும்.

ii. அரசு சாரா நிறுவனங்களின் வளர்ச்சி மாநில/பிராந்தியரீதியில் சமநிலையில் இல்லை. ஊனமுற்றோருக்கான சேவைகள் அதிகம் இல்லாத பிராந்தியங்களில் பணியாற்ற, அரசுசாராத தொண்டு நிறுவனங்கள் செயல்பட ஊக்குவிக்கப்படும். அப்படியான பகுதிகளில் ஏற்கனவே இச்சேவையில் அறியப்பட்ட அரசுசாரா நிறுவனங்கள்

இவ்விடங்களில் பணியாற்ற முன்வந்தால் ஊக்குவிக்கப்படும்.

iii. குறைந்தபட்ச தர அளவுகோல்கள், நடத்தைகள் மற்றும் விதிமுறைகளை உருவாக்க அரசு சாரா நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

iv. அரசுசாரா நிறுவனங்கள் தங்களது மனிதவளத்தை மேம்படுத்தும் பயிற்சிகளைக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும். நிர்வாகத் திறனில் ஏற்கனவே பயிற்சி இருந்தால் மேலும் அத்திறன் வலுப்படுத்தப்படும். வெளிப்படைத் தன்மை, பதில்சொல்லும் கடமை, நடைமுறைகளை எளிதாக்குதல் போன்றவை அரசு- அரசுசாரா நிறுவனங்களின் கூட்டுச்செயல்பாட்டுக்கு முக்கிய வழிகாட்டுக் கூறுகளாக இருத்தல் அவசியம்.

v. அரசுசாரா நிறுவனங்கள், அரசின் நிதிஉதவிகளைச் சார்ந்திராமல் தங்கள் வளங்களை தாமே உருவாக்கவும், அரசுசாராத் துறையிலேயே நிதி வளங்களை அதிகரிக்கவும் ஊக்குவிக்கப்படலாம். சரியான முறையில் நிதி உதவி பெறுவதை படிப்படியாக குறைத்துக் கொள்வதையும் பரிசீலிக்கலாம். அப்போதுதான் இருக்கும் வளங்களைப் பெருக்கி நிறைய அரசுசாரா நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யமுடியும். இந்த இலக்கை நோக்கித்தான் வளங்களை உருவாக்குவதில் அரசுசாரா நிறுவனங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

## IX. ஊனமுற்ற நபர்கள் பற்றிய முறையான செய்தி சேகரிப்பு(Collection of regular information on Persons with Disabilities)

38. ஊனமுற்ற நபர்களின் சமூகப் பொருளாதார நிலைகளைப் பற்றிய விவரங்களைத் தொடர்ந்து சேகரிப்பதும், தொகுப்பதும், ஆராய்வதும் அவசியம். தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு, 1981 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஊனமுற்ற நபர்களின் சமூகப் பொருளாதார விவரங்களை சேகரித்து வருகிறது. 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் ஊனமுற்ற நபர்களின் விவரங்கள் தொகுக்கப்பட்டன. தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊனமுற்ற நபர்களின் விவரங்களைச் சேகரிக்க வேண்டும். மக்கள் தொகைக் கணக்கெடுக்கும் அமைப்பின் வரையறையும், தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனத்தின் வரையறையும் சேர்த்துப் பார்க்கப்படும்.

39. சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் விரிவான

தகவல்களைக் கொண்ட இணையத்தளம் ஊனமுற்ற நபர்களுக்காக உருவாக்கப்படும். அரசு மற்றும் தனியார் துறையினர் தங்கள் இணையத்தளங்களை பார்வையற்றவர்களும் வாசிக்கும்படி திரை வாசிப்புத் தொழில்நுட்பத்தை ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுவார்கள்.

**X. ஆய்வு (Research)**

40. ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும். அவர்களது சமூகப் பொருளாதார, கலாசாரச் சூழலில் ஊனம் ஏற்பட்டதற்கான கலாசாரரீதியான காரணங்கள், ஊனமுற்ற குழந்தைகளின் ஆரம்பக் கல்வி முறைகள், அவர்களுக்குத் தேவைப்படும் எளிதான கருவிகள் மற்றும் துணைக்கருவிகள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மாற்றக்கூடியதும் சமூகம் அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் உதவக்கூடியதுமான எந்தவொரு காரணி/துறையிலும் ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படும். ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஊனமுற்ற நபர்கள் தேவைப்படின் அவர்களது சம்மதமும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், பராமரிப்பவரின் சம்மதம் மிகவும் அவசியம்.

**XI. விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார வாழ்க்கை (Sports, Recreation and Cultural life)**

41. கூட்டு வாழ்க்கைத்திறனை மேம்படுத்தவும், மருத்துவரீதியாகவும் விளையாட்டுப் பயிற்சியின் பங்களிப்பு மறுக்க முடியாதது. ஊனமுற்ற நபர்களுக்கும் விளையாடுவதற்கான, பொழுதுபோக்குவதற்கான, கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான உரிமைகள் உண்டு. விதவிதமான விளையாட்டுகள், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார செயல்பாடுகளில் அவர்கள் பங்கெடுக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

## XII. ஊனமுற்றோர் நலம் தொடர்பாக அமலில் இருக்கும் சட்டங்களில் திருத்தங்கள்(Amendments to existing Acts dealing with the Persons with Disabilities)

42. ஊனமுற்ற நபர்களுக்கான சமவாய்ப்பு, உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு சட்டம்(1995) அமலுக்கு வந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் சேகரிக்கப்பட்ட அனுபவங்களும், ஊனமுற்றோர் நலத்துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிகளும் இந்தச்

சட்டத்திற்கு சில திருத்தங்களுக்கான தேவையை உருவாக்கின. இந்தச் சட்டத்தின் பயனாளிகள், பங்குதாரர்களிடம் இந்த திருத்தங்கள் பற்றி ஆலோசிக்கப்படும். இந்திய ஊனமுற்றோர் கவுன்சில்(ஆர்சிஐ) மற்றும் தேசிய அறக்கட்டளை சட்டங்களும் தேவைப்பட்டால் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது பரிசீலிக்கப்படும்.

தலையீடு செய்ய வேண்டிய முதன்மைப் பிராந்தியங்கள்(Principal Areas of Intervention)

**I. தடுப்பு, ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மற்றும் தலையீடு(Prevention, Early Detection and Intervention)**

43. ஊனத்தை முன்பே தடுக்கவும், ஊனத்தை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

i. தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் தடுப்பூசித் திட்டங்கள் (குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு) , பொது நலம் மற்றும் சுகாதார நலம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

ii. குழந்தைகளைப் பாதிக்கும் ஊனத்தை தொடக்கத்திலேயே கண்டறிய மருத்துவர்களுக்கும், துணை மருத்துவப்பணியாளர்களுக்கும் போதிய பயிற்சிகளை அளிப்பது அவசியம்.

iii. ஊனத்தடுப்பு, சிகிச்சைத் தலையீடுக்கான பயிற்சி பாடங்கள் மற்றும் வசதிகள் மருத்துவர்களுக்கும், துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் உருவாக்கப்படும்.

iv. முதுகலை, இளங்கலை மற்றும் டிப்ளமோ மருத்துவக்கல்வியில் ஊனத்தடுப்பு, ஆரம்பத்திலேயே கண்டறிதல் மற்றும் சிகிச்சைத் தலையீட்டு முறைகளையும் சேர்த்தல் அவசியம்

v. ஊனமுற்ற நபர்கள் வாழும் குடும்பங்களுக்கு பிரத்யேக கையேடுகள் தயாரிக்கப்பட்டு இலவசமாகத் தரப்படுதல் வேண்டும்.

vi. ஊனமுற்றோர் சிறப்புக் கல்வி, உளவியல், இயன்முறை மருத்துவம், தொழில்வழி சிகிச்சை, ஒலியியல், பேச்சு நோய்க்கூறியல், தொழில் ஆலோசனை மற்றும் பயிற்சி மற்றும் சமூகப்பணி ஆகியவற்றில் போதிய பயிற்சி பெற்றவர்களைத் தேவையான அளவுக்கு உருவாக்குதல் அவசியம்.

vii. மரபணுவியல் துறையில் சமீபத்தில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் மூலம், மனநலக்குறைபாடு உள்ளிட்ட பிறவி ஊனத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

viii. ஊனத்தின் பின்விளைவுகளைக் குறைக்க சரியான திட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன் இருக்கும் ஆரோக்கிய நல அமைப்புக்குள் இரண்டாம் நிலை ஊனங்களைத் தடுப்பதற்கான முறைகள் உருவாக்கப்படும்.

ix. உணவூட்டம், ஆரோக்கிய நலம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வுக் கல்வி, வளரிளம் பருவ வயதில் இருக்கும் சிறுமிகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும், தாய்மாருக்கும், குழந்தைகளைப் பிரசவிக்கும் பருவத்தில் இருக்கும் பெண்களுக்கும் வழங்குவதற்கு முயற்சிக்கப்படும். ஆசிரியர் பயிற்சி வகுப்புகளிலேயே தொடங்கப்பட்டு பள்ளிகளில் இந்த ஊனத்தடுப்புக் கல்வித் திட்டங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

x. குழந்தைகளைப் பரிசோதித்து ஊனம் தாக்கும் நிலையில் உள்ள குழந்தைகளைக் கண்டறியும் முறைகளைப் பற்றிய பயிற்சிகளும் நடத்தப்படும்.

**II. மறுவாழ்வுத் திட்டங்கள் (Programmes of Rehabilitation)**

44. மருத்துவரீதியான, கல்வி மற்றும் சமூக மறுவாழ்வுத் திட்டங்கள் மருத்துவ மற்றும் மறுவாழ்வுப் பணியாளர்களின் உதவியுடன் உருவாக்கப்படும். இத்திட்டத்தில் ஊனமுற்ற நபர்கள் பங்களிப்பதோடு அவர்களின் குடும்பத்தினர், சட்டரீதியான பாதுகாவலர்கள் மற்றும் சமூகத்தினரும் பங்கேற்க வைக்கப்படுவார்கள். **இலக்கை நோக்கி அரசின் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது உறுதி செய்யப்படும். அரசு பின்வரும் குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்கும்:**

i. தொகுப்பு மறுவாழ்வு சேவைகளான மனிதவள மேம்பாட்டு, ஆய்வு மற்றும் நீண்டகால அடிப்படையிலான பிரத்யேக மறுவாழ்வுப் பயிற்சிகளைத் தருவதற்கு மாநில மையங்கள் உருவாக்கப்படும்.

ii. சமூக அடிப்படையிலான மறுவாழ்வுத் திட்டங்கள் ஊக்குவிக்கப்படலாம். ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள்/

பராமரிப்பவர்களும் சேர்ந்த சுய உதவிக்குழுக்கள் மறுவாழ்வுப் பணியில் ஈடுபட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

iii. தீவிர மனநலக்குறைபாடுகள் உள்ளவர்களுக்கான மனநல இல்லங்களை மாவட்ட அளவிலும் பஞ்சாயத் ராஜ் அமைப்பாக அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்குவது ஊக்குவிக்கப்படும். இதற்கு மாற்றாகவும் சமூக, குடும்ப உதவி இல்லாத மனநலக் குறைபாடுள்ளவர்களுக்கு தடுப்பு நல இல்லங்களை உருவாக்க உதவிக்குழுக்கள் ஊக்குவிக்கப்படும்

iv. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில்ரீதியான, சமூகரீதியான திறன்களை மேம்படுத்தும் பயிற்சிகளைத் தர மறுவாழ்வு மையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**III. மனித வள மேம்பாடு(Human Resource Development)**

45. மனித வளம் கீழ்க்கண்ட பிராந்தியங்களில் **உருவாக்கப்படும்** -

i. ஆரோக்கிய நலப்பணியில் உள்ள ஆரம்பகட்டப் பணியாளர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்ககள், பேறுகால உதவியாளர் போன்றவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

ii. அரசு மற்றும் அரசு சார நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு பயிற்சியும், விழிப்புணர்வும் தரும் பயிற்சிகளுக்கு உதவியளிக்கப்படும்.

iii. சமூகத்தில் உள்ள முக்கிய நபர்களுக்கு பயிற்சியும், விழிப்புணர்வுக் கல்வியும் தரப்படும். பஞ்சாயத்து உறுப்பினர்கள், குடும்பத் தலைவர்களுக்கு இந்த பயிற்சிகள் அளிக்கப்படலாம்.

iv. ஊனமுற்ற நபர்களைப் பராமரிப்பவர்களுக்கு பயிற்சியும் விழிப்புணர்வுக் கல்வியும் கொடுத்தல் அவசியம்.

46. ஊனமுற்ற குழந்தைகளை உள்ளடக்கிய கல்வித்திட்டம், சிறப்புக்கல்வி, வீட்டிலேயே கல்வி தருதல், பள்ளிக்குச் செல்லும் முன்பான கல்வி போன்றவற்றை உள்ளடக்கிய கல்வியைத் தரும் மனிதவளம் பயிற்சி கொடுக்கப்பட்டு மேம்படுத்தப்படும். பல்வேறு சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டது போல மேம்படுத்தப்படும்:

i. அனைவரையும் உள்ளடக்கிய கல்விப் பயிற்சி தர ஆசிரியர்களுக்கு

பயிற்சிப் பாடங்கள் உருவாக்கப்படும்.

ii. பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் உயர் சிறப்புக்கல்வித் திட்டங்கள் உருவாக்கப்படும்

iii. ஊனமுற்ற பெரியவர்கள்/ மூத்த குடிமக்களுக்கு வீட்டில் இருந்தவாறே கல்விகற்பிக்கவும் மற்றும் அவர்களைப் பராமரிக்கவும் பராமரிப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

47. ஊனமுற்ற நபர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்களைத் தயாரிக்கும் இந்திய மறுவாழ்வு மன்றம் ஒருங்கிணைந்த முகவாண்மையாக செயல்படும். ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பயிற்சி தொடர்பாக தேசியப் பயிற்சி நிலையங்களின் பங்கு தெளிவாக உருவாக்கப்படும். அத்துடன் ஐந்தாண்டு திட்டமும் தெளிவாக வரையறுக்கப்படும்.

**IV. ஊனமுற்ற நபர்களுக்கு கல்வி(Education of Persons with Disabilities)**

48. பள்ளிக்கல்விக்கு முந்தைய பயிற்சி, ஆரம்பக்கல்வி பயிற்சி மற்றும் இரண்டாம் நிலைக்கல்வி ஆகியவை 2020 க்குள் ஊனமுற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் **கிடைக்க** உறுதியளிக்கப்படும். சிறப்பு கவனம் கொடுக்கப்படும் பகுதிகள் **கீழ்க்கண்டவாறு** -

i. எல்லா வகையிலான ஊனமுற்ற குழந்தைகளும் தடையில்லாமல் உலவக்கூடிய பள்ளிகள்( கட்டடம், வழிப்பாதைகள், கழிப்பறைகள், விளையாட்டு மைதானங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள்) உருவாக்கப்படும்.

ii. கற்பிக்கும் முறை மற்றும் மொழிஊடகம் ஆகியவை **பெரும்பான்மையான** ஊனமுற்ற குழந்தைகளின் தேவைகளுக்கேற்ப பொருத்தமாக தேர்ந்தெடுக்கப்பட்டு வடிவமைக்கப்படும்.

iii. தொழில்நுட்ப / கூடுதல் இணைப்பாக / சிறப்புப் பயிற்சி கல்விமுறை / போதனை முறைகள் ஆகியவை பள்ளி வளாகத்துக்குள்ளேயோ, சில பள்ளித்தொகுதிக்கு ஒரு மையமாக**வோ** (எளிதில் அணுகக்கூடிய) **இருக்க வேண்டும்**.

iv. கற்பிக்கும் விளையாட்டுக் கருவிகள், பிரெய்லி மற்றும் பேசும் புத்தகங்கள், சரியான மென்பொருள் போன்றவை அவர்களுக்கு எளிதில் கிடைக்குமாறு வசதிகள் செய்யப்படும். பொது நூலகங்கள், இணையவழி

நூலகங்கள், பிரெய்லி நூலகங்கள் மற்றும் பேசும் புத்தக நூலகங்கள், ஆய்வுதவி மையங்கள் ஆகியவற்றுக்கு உதவிப்பணம் வழங்கப்படும்.

v. தேசிய திறந்தநிலைப் பள்ளி மற்றும் தொலைநிலைக் கல்வித் திட்டங்களும் பிரபலப்படுத்தப்பட்டு நாட்டின் பிற பகுதிகளிலும் அமைக்கப்பட ஊக்குவிக்கப்படும்.

vi. சைகை மொழி, மாற்று தகவல் தொடர்பு விரிவுபடுத்தல்களும் பிற தொடர்பு முறைகளும் அங்கீகரிக்கப்பட்டு, தரப்படுத்தப்பட்டு, பிரபலப்படுத்தப்படும்.

vii. எளிதாகப் பயணிக்கும் தூரத்தில் பள்ளிகள் இருக்கும். இல்லையெனில் வாகன வசதிகள் சமூகக்குழு, மாநில அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப்படும்.

viii. பெற்றோர்-ஆசிரியர் ஆலோசனை மற்றும் குறைதீர்க்கும் மையம் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும்.

ix. ஆரம்பப்பள்ளி, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் ஊனமுற்ற பெண் குழந்தைகள் சேருவதையும், வெளியேறுவதையும் ஆண்டுக்கு ஒருமுறை கணக்கிட்டு பரிசீலிக்க **சிறப்புத் திட்டம்** ஒன்று உருவாக்கப்படும்.

x. பிற குழந்தைகளுடன் சேர்ந்து கல்விகற்க இயலாத ஊனமுற்ற குழந்தைகள் பிரத்யேகப் பள்ளிகளில் தங்கள் கல்விப்பயிற்சியைத் தொடருவார்கள். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு இந்த சிறப்புப் பள்ளிகள் புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்படும். மையநீரோட்ட கல்விப்போக்கில் சேர்ந்து பயன்பெறும் வகையில் இந்தப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் தயார் செய்யப்படுவார்கள்.

xi. ஊனத்தின் தன்மையைப் பொருத்து, தனிப்பட்ட சூழல் மற்றும் விருப்பங்களைப் பொருத்து வீட்டிலேயே கல்வியைப் பெற விரும்பினாலும் அதுவும் அளிக்கப்படும்.

xii. பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு முறைகள் ஊனமுற்ற குழந்தைகளின் பல்வேறு வகையான பிரச்னைகளையும் அவர்களது செயலாற்றலையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்படும். தேர்வு முறை ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலகுவாக இருக்கும்படி மாற்றப்படும். கூடுதல் நேரச்சலுகை, கால்குலேட்டர்கள், கிளார்க் டேபிள் மற்றும் தேர்வு எழுதும் உதவியாளரைப் பயன்படுத்த சலுகைகள் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

xiii. அனைவரையும் உள்ளடக்கிய கல்வியைத் தருவதற்கான மாதிரிப் பள்ளிகள் ஒவ்வொரு மாநிலத்திலும்/யூனியன் பிரதேசத்திலும் ஊனமுற்ற நபர்களின் கல்வியை ஊக்குவிக்க உருவாக்கப்படும்.

xiv. அறிவுச் சமூகத்தின் யுகம் இது. இதில் கணிப்பொறிகள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. எல்லா ஊனமுற்ற குழந்தை**களும்** கணிப்பொறிப் பயன்பாட்டைப் பெறுமாறு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

xv. 6 வயது வரையிலான ஊனமுற்ற குழந்தைக**ளுக்குப்** போதுமான சிகிச்சைத் தலையீடுகள் செய்யப்படும். அப்போதுதான் அவர்களையும் கல்வித்திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்க முடியும்.

xvi. மனநலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உளவியல்சமூக மறுவாழ்வு மையங்களில் கல்வி வசதிகள் அளிக்கப்படும்.

xvii. ஊனமுற்ற குழந்தைகளின் திறன்களைப் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாத பல பள்ளிகள் அக்குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதில்லை. இதற்காக ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் பிற பள்ளி ஊழியர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடைபெறும்.

xviii. ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் தற்போது சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தால் நிதிஉதவி செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன. அனைத்தையும் உள்ளடக்கிய கல்வி வள மையங்களாக **மாற இவை** ஊக்குவிக்கப்படும். மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் தேவையை முன்னிட்டு புதிய சிறப்புப் பள்ளிகள் உருவாக்கலாம்.

xix. தீவிர ஊனக்குறைபாடுள்ள வயதுவந்தோர் கல்வி / **ஓய்வு** மையங்கள் அமைக்க ஊக்குவிக்கப்படும்

xx. உயர்கல்வி நிலையங்களில் ஊனமுற்ற நபர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வலியுறுத்தப்படும். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்கல்வி நிலையங்களுக்கு ஊனமுற்ற மாணவர்களின் தேவையை முன்னிட்டு மையங்களை அமைப்பதற்கு நிதி உதவி அளிக்கப்படும். வகுப்பறைகள், விடுதிகள், உணவகங்கள் மற்றும் பிற வசதிகளை ஊனமுற்ற நபர்களுக்கு ஏற்றவாறு அமைக்க ஊக்குவிக்கப்படுவார்கள்.

xxi. ஊனமுற்ற குழந்தைகளை நிர்வகிக்கும் விஷயங்கள் தொடர்பாக

**பாடத்திட்டங்கள் இணைக்கப்பட்டு** ஆசிரியர்களுக்குப் **பயிற்சிகள் வழங்கப்படும்** .

49. ஊனமுற்ற நபர்களின் கல்வி தொடர்பான அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் அமைச்சகமாக மனிதவளத் துறை அமைச்சகம் செயல்படும்.

**V. வேலைவாய்ப்பு(employment)**

50. ஊனமுற்ற நபர்களுக்கான வேலை வாய்ப்புக்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

i. தனியார் துறை நிறுவனங்களில் ஊனமுற்ற நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை அரசு தொடங்கலாம்.

ii. வீட்டிலேயே இருந்துகொண்டு வருவாய் தரும் பணிகளில் ஈடுபட குறிப்பாக தீவிர குறைபாடுகள், பலகுறைபாடுகள் கொண்ட ஊனமுற்ற நபர்களுக்கான திட்டங்கள் ஊக்குவிக்கப்படும். ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் வேலைவாய்ப்புப் பயிற்சிகொடுக்கும் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும்

iii. எந்திரங்கள், பணிநிலையம் மற்றும் பணிச்சூழலை ஊனமுற்றோர் எளிமையாகப் பயன்படுத்துவதற்கான வடிவமாற்றங்களை ஊக்குவிக்க வேண்டும். பயிற்சி மையங்கள்/தொழிற்சாலைகள்/ தொழிலகங்கள் மற்றும் அலுவலகங்களை ஊனமுற்ற நபர்கள் தடையற்று இயங்குவதற்கான இடங்களாக மாற்றுதல் அவசியம்.

iv. ஊனமுற்ற நபர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களையும், சேவைகளையும் வாங்குவதற்கு மார்க்கெட்டிங் போர்ட் **(சந்தைப்படுத்துதல் குழு)** , மாவட்ட கிராமப்புற அபிவிருத்தி அமைப்புகள், தனியார் அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

v. வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஊனமுற்ற நபர்களையும் உள்ளடக்கும் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும். அப்போதுதான் சட்டரீதியான 3 சதவிகித இட ஒதுக்கீட்டால் ஊனமுற்ற நபர்கள் பயன்பெற முடியும்.

**VI. தடையற்ற சூழலை உருவாக்குதல் (barrier free environment)**

51. ஊனமுற்ற நபர்களுக்கு தடையற்ற சூழலை உருவாக்க கீழ்கண்ட உபாயங்கள் கையாளப்படும்:

(i) பொதுக் கட்டடங்கள் (பணி அல்லது பொழுதுபோக்கு), போக்குவரத்துக்கு உதவும் சாலைகள், சுரங்கப்பாதை மற்றும் பாதசாரிகளுக்கான வழிகள், ரயில்வே பிளாட்பாரங்கள் **(நடைமேடை)**, பேருந்து நிறுத்தங்கள்/நிலையங்கள், துறைமுகங்கள், விமானநிலையங்கள், பேருந்து, ரயில், விமானம் மற்றும் படகுகள், கப்பல்கள், விளையாட்டு மைதானங்கள், திறந்த வெளிக்கூடங்கள் போன்றவற்றை ஊனமுற்றோர் தடையின்றி பயன்படுத்துமாறு உருவாக்குதல் அவசியம்.

(ii) சைகை மொழியை பொது நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்த ஊக்குவிக்கப்படும்.

(iii) கட்டட வடிவமைப்பாளர்கள் மற்றும் கட்டடப் பொறியாளர்கள் கட்டடங்களை வடிவமைக்கும்போது ஊனமுற்றவர்களும் சிரமங்கள் இன்றி அவற்றைப் பயன்படுத்தும் வகையில் அவர்களுக்கான பாடத்திட்டங்களை மேம்படுத்த வேண்டும். அரசு கட்டட வடிவமைப்பாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு இப்பிரச்னைகள் தொடர்பாக பணியின் போது பயிற்சிகளும் தரப்படும்.

(v) ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழல் உள்ள கட்டட வடிவமைப்புக்கான விரிவான சட்டதிட்டங்களும், வரையறைகளும் உருவாக்கப்படும். இந்த விதிமுறைகளை அனைத்து மாநிலங்களும், நகராட்சி அமைப்புகளும் பஞ்சாயத்து அமைப்புகளும் பின்பற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். **இனி புதிதாகக் கட்டப்படும்** மக்கள் பயன்படுத்தும் கட்டடங்கள் ஊனமுற்ற நபர்கள் எளிதாகப் புழங்குமாறு இருக்குமாறு உறுதிசெய்வது அரசு அதிகாரிகளின் கடமையாகும்.

(vi) மாநில வாகன நிறுவனங்கள் தங்கள் வாகனங்களை ஊனமுற்ற நபர்கள் பயன்படுத்துமாறு உருவாக்குதல் வேண்டும். ரயில்பெட்டிகள் படிப்படியாக ஊனமுற்றோருக்கு சௌகரியமானவையாக மாற்றப்படும். அத்துடன் பிளாட்பாரங்கள், கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் பிற வசதிகளையும் ஊனமுற்ற நபர்கள் பயன்படுத்துமாறு உருவாக்குதல் வேண்டும்.

(vii) அரசு மற்றும் தனியார் தொழில்துறை நிறுவனங்கள், அலுவலகங்கள், பொதுப் பயன்பாட்டுப் பகுதிகள் ஆகியவற்றில் ஊனமுற்ற நபர்கள் தடையின்றி பணியாற்றும் சூழலை உருவாக்கப்படுவதை அரசு உறுதிசெய்யும்.

(viii) தகவல் தொழில்நுட்பத் துறை அலுவலகங்கள் மற்றும் பணி இடங்களில் ஊனமுற்ற நபர்கள் தடையற்றுப் பணியாற்றும் வசதிகளை ஊக்குவிக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ix) பொதுப் பயன்பாட்டில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் ஊனமுற்றோருக்கு சாதகமான வசதிகளைக் கொண்டிருக்கிறதா என்று ஆய்வுசெய்யப்படும். இதற்காக தொழில்முறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஆடிட்டர்களின் சேவைகள் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

(x) ஊனமுற்ற நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வங்கி முறைகள் ஊக்குவிக்கப்படும்.

(xi) ஊனமுற்ற நபர்களின் தகவல் தேவைகள், தகவல் சேவைகள் மற்றும் அரசு ஆவணங்களைப் பார்ப்பதற்கான உரிய வசதிகள் செய்து தரப்படும். பிரெய்லி (**பார்வையற்றோருக்கான அச்சுமுறை**), ஒலிநாடா உதவி, பெரிய எழுத்து ஆவண வசதிகள் பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்குக் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.

**VII. சமூகப் பாதுகாப்பு (Social Protection)**

52. ஊனமுற்ற நபர்களுக்கு போதுமான சமூகப்பாதுகாப்பு வழங்குவதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்:-

i. ஊனமுற்ற நபர்களுக்கு வரிவிலக்கு அளிக்கும் திட்டங்கள் சரியாக நடைமுறையில் இருக்கிறதா என்பதை குறிப்பிட்ட இடைவெளிகளில் ஆய்வு செய்ய வேண்டியது அவசியம். ஊனமுற்ற நபர்களுக்கு வருமான வரி மற்றும் பிற வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியம்.

ii. மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகிகள், ஊனமுற்ற நபர்களுக்கான ஓய்வூதிய**த்**தொகை மற்றும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையை சூழல் மற்றும் காலநிலைக்கேற்ப பொருத்தமாக

இருக்கிறதா என்று பார்த்து சரிசெய்தல் வேண்டும்.

iii. எல்ஜசி இந்தியா நிறுவனம் குறிப்பிட்ட ஊனம் உள்ள நபர்களுக்கு காப்பீட்டுத் திட்டங்களை அளிக்கிறது. அனைத்து காப்பீட்டு நிறுவனங்களும் ஊனமுற்ற நபர்களையும் தங்கள் திட்டங்களில் சேர்க்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**VIII. ஆய்வு(Research)**

53. ஊனமுற்ற நபர்களுக்கான புதிய தொழில்நுட்பங்களை ஆய்வு செய்யவும், தேவைப்படின் அதற்கு சர்வதேச ஒத்துழைப்பை நாடவும் ஊக்குவிக்கப்படும். ஆய்வின் முடிவுகள் பரவலாகத் தெரியப்படுத்தப்படும். அது கீழ்க்கண்ட அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்:-

i. ஊனத்தின் சமூக-கலாசார அம்சங்கள், ஊனமுற்ற நபர்கள் குறித்த சமூக அணுகுமுறை மற்றும் சமூக நடத்தை முறைகள்.

ii. ஊனமுற்ற நபர்கள் கல்விதொடர்பான சமூகரீதியான அளவீடுகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் ஊனமுற்ற நபர்களுக்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் பெருக்குவதற்கான திட்டங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை ஆராய முடியும்.

**iii.** ஊனத்தை வகைபிரித்து அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை புள்ளிவிவரமாக்கவும். குறிப்பாக விபத்துகள் மற்றும் பேரிடர்களில் ஊனமான நபர்களின் வேலைவாய்ப்புகளை **ஆராய்ந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும்.**

iv. ஊனக் குறைபாடு ஏற்படுவதற்கான பல்வேறு காரணங்களையும், நேர்வுச்சூழல்களையும் ஆராயவும்.

v. இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் மேற்பார்வையில் குழந்தைகளுக்கு ஊனம் நேர்வதைக் குறைக்கும் மரபணு ஆய்வில் ஈடுபடவும்

vi. தனிப்பட்ட ரீதியில் ஓரிடத்தில் **இருந்து** இன்னொரு இடத்திற்கு சுலபமாகப் பயணிப்பதற்கான தொழில்நுட்ப ஆய்வு, மொழிரீதியான/ சைகைத் தொடர்புகளை மேம்படுத்தும் ஆய்வுகள், அன்றாடப் பயன்பாட்டில் இருக்கும் பொருட்களை ஊனமுற்றோர் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு மாற்றுதல் ஆகியவை ஊக்குவிக்கப்பட வேண்டும். இவை விலை மலிவாகவும், பயன்படுத்துவதற்கு எளிதாகவும்,

நீடித்த நாட்கள் உழைக்குமாறும் இருத்தல் அவசியம். இக்கருவிகளை முன்னணித் தொழில்நுட்ப பயிலகங்களின் உதவியுடன் உருவாக்க வேண்டும்.

54. மறுவாழ்வு தொழில்நுட்ப மையம் ஒன்றை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் உருவாக்கலாம். ஆய்வு மற்றும் மேம்பாடு, பரிசோதனை மற்றும் சான்றிதழ் தொழில்நுட்பங்கள், பயிற்சி ஆகிய பணிகள் இந்த மையத்தில் **செயல்படுத்தப்படலாம்**. ஊனமுற்ற நபர்கள் நவீனத் தகவல் தொழில்நுட்பங்களை எளிதாகப் பயன்படுத்தும் விதத்தில் உரிய மென்பொருள், வன்பொருள்களை உருவாக்கும் பணிகளையும் இந்த மையம் செய்யும்.

## IX. விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாசார செயல்பாடுகள்(Sports, Recreation and Cultural activities)

55. விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாசார செயல்பாடுகளில் போதிய வாய்ப்புகளை சமமாக உருவாக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் : -

i. பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளுக்காக விளையாட்டு மையங்கள், விடுதிகள், கடற்கரைகள், உள்விளையாட்டு அரங்கங்கள், **உடற்பயிற்சியகம்** (ஜிம்) ஆகியவற்றை உருவாக்கவும்.

ii. பயண நிறுவனங்கள், விடுதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை, ஊனமுற்றோருக்கான பிரத்யேகத் தேவைகளை மனதில் கொண்டு பொழுதுபோக்குச் சுற்றுலாக்கள் மற்றும் பயண வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.

iii. ஊனமுற்ற நபர்களிடம் உள்ள திறன்களை ஆடையாளம் கண்டு அவர்களை உள்ளூர் அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் வெவ்வேறு விளையாட்டுகளில் ஈடுபடும் உதவிகளைச் செய்ய வேண்டும்.

**iv.** விளையாட்டு அமைப்புகள் மற்றும் கலாசார அமைப்புகளை ஊனமுற்ற நபர்களுக்காக உருவாக்குவது ஊக்குவிக்கப்படும். தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஊனமுற்ற நபர்களின் பங்கேற்புக்கு உதவிசெய்யும் நடவடிக்கைக**ளுக்கு இது துணை செய்யும்**.

v. விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் ஊனமுற்ற நபர்களுக்கான தேசிய விருது உருவாக்கப்படும்.

vi. 56. சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் இதுதொடர்பான அனைத்து

அம்சங்களையும் ஒருங்கிணைக்கும், அமல்படுத்தும் அமைப்பாக இருக்கும்.

vii. 57. தேசியக் கொள்கையை அமல்படுத்தும் விஷயங்களை அமைச்சரவைகளுக்கு இடையிலான அமைப்பு ஒருங்கிணைக்கும். இதில் தொடர்புடையவர்களான முக்கியமான அரசுசாரா நிறுவனங்கள், ஊனமுற்றோர் அமைப்புகள், பிரச்சாரக்குழுக்கள்,நிபுணர்கள், தொழில்துறையினர் **மற்றும்** ஊனமுற்ற நபர்களின் பெற்றோர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த அமைப்பில் இடம்பெறுவார்கள். இதேபோன்ற அமைப்புகள் மாநில மற்றும் மாவட்ட அளவிலும் ஏற்படுத்தப்படும். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளும், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு மயங்களின் மாவட்ட அளவு குழுக்களுடன் இத்தேசியக் கொள்கையை அமல்படுத்துவதற்காக கூட்டாகச் செயல்படும்.

viii. 58. உள்துறை, ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலம், கிராம மேம்பாடு, நகர்புற வளர்ச்சி, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு, ரயில்வே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம், தொழிலாளர், பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மற்றும் நடுநிலைக் கல்வி மற்றும் கல்வியறிவு, உயர்நிலைப் பள்ளிக்கல்வி மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கல்வி, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை, பொதுத்துறை நிறுவனங்கள், வருவாய், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், பணியாளர் மற்றும் பயிற்சி ஆகிய துறைகள் சேர்ந்து இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்கான திட்டத்தை சரியானபடி உருவாக்கும். ஐந்தாண்டு திட்டம் ஒன்றும் ஆண்டுவாரித் திட்டங்களும் போடப்பட்டு இலக்குகளும் நிர்ணயிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடும் ஒவ்வொரு அமைச்சரவை மற்றும் துறைகளால் தாக்கல் செய்யப்படும். இந்த அமைச்சரகங்கள் மற்றும் துறைகளின் ஆண்டறிக்கையில் அந்த ஆண்டு காணப்பட்ட வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ள முடியும்.

ix. 59. ஊனமுற்ற நபர்கள் நலத்துறைக்கான தலைமை ஆணையர் **மத்திய அளவிலும், மாநில ஆணையாளர்கள்** மாநில அளவிலும் தங்களுக்கு இடப்பட்ட பொறுப்புகளையும் தாண்டி தேசியக் கொள்கை அமலாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

x. 60. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் தேசியக்கொள்கையை அமல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும். உள்ளூர் அளவிலான

பிரச்னைகளைக் கண்டறிந்து அதற்குப் பொருத்தமான தீர்வுத் திட்டங்களையும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் உருவாக்க முடியும். தங்கள் திட்டங்களில் ஊனமுற்றோர் நலன் தொடர்பான அம்சங்களையும் இந்த அமைப்புகள் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

xi. 61. தேசியக் கொள்கை அமலாக்கத்தின் போது உருவாக்கப்பட்ட உள்கட்டுமான வசதிகள் சரியாக பராமரிக்கப்படவும், நீண்டகால அளவில் பயனுள்ள வகையில் இருத்தலும் வேண்டும். உள்கட்டுமான வசதிகளைப் பராமரிக்கவும், அன்றாடச் செலவுகளை எதிர்கொள்ளவும் தங்களிடமிருந்தே சமூகத்தினர் வளங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இல்லையெனில் தனியார் துறையினரிடம் பெறவேண்டும். இது அரசின் வளங்களைச் சிக்கனப்படுத்துவதோடு மட்டுமின்றி சமூகத்தினரும், தனியார் தொழிலதிபர்களும் தங்கள் பொறுப்பை உணர்வதற்கு வழிவகுக்கும்.

xii. 62. தேசியக் கொள்கை அமலாக்கம் குறித்து ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளு**ளுக்கு ஒருமுறை** விரிவான ஆய்வு ஒன்று செய்யப்படும். அமலாக்க நிலை குறித்த ஆவணமும், அடுத்த ஐந்தாண்டுகளுக்கான திட்டங்களும் தேசியக் கூட்டத்தில் முன்வைப்பதற்கு தயாரிக்கப்படும். மாநில அரசுகளும், யூனியன் நிர்வாகங்களும் அரசுக் கொள்கை ஒன்றை உருவாக்க நிர்ப்பந்திக்கப்பட்டு, செயல்திட்டத்தை உருவாக்கவும் வலிறுத்தப்படும்.